DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.61/20

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name சோலைராஜ் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.11.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் பாரஸ்ட்ரோடு தேனியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ வைத்து வேலை செய்துவருகிறேன். 9.4.19 ல் சாயங்காலம் ஆட்டோவை வரிசையில் நிறுத்தி வைத்திருந்தேன். அப்போது பாண்டி மகன் சேகர் எனக்கு முன்பு வந்து ஆட்டோவில் ஏற்றினார். நான் உடனே நான் இருக்கிறேன் ஏத்தாதே என்று சொன்னேன்ன அதற்கு அவர் அபப்டி தான் ஏற்றுவேன். நீ என்ன சொல்வது என்று தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசினார். நான் இருக்கிறேன் நீ ஏத்தாதே என்று சொன்னதற்கு என்னை அடித்துவிட்டார். அங்கிருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள். கோவிலுக்கு அருகில் இருந்த கல்லை எடுத்துவந்து எதிரி என் தலையில் போட்டுவிட்டார். அதில் என் மண்டை உடைந்துவிட்டது. எங்களுக்குள் கைகலப்பு ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள். அப்போது எதிரி என் மூக்கை கடித்து எடுத்துவிட்டார். எனக்கு இரத்தம் அதிகமாக வந்ததால் ஆட்டோவில் ஏறி கவிலக்கு மருத்துவமனைக்கு சென்றோம். அப்போது எதிரி ஆள் வந்ததால் இன்று தப்பித்துக்கொண்டாய் என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். க.விலக்கு மருத்துவமனையில் இரத்தம் அதிகமாக வருவதாலும், மதுரை அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். மூக்கை கடித்து தனியாக எடுத்துவிட்டதால் உடனடியாக சிகிச்சை அளிக்கவேண்டும் என்று மதுரையில் தனியார் மருத்துவமனைக்கு சென்றோம். மதுரை மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து ஒருமாதம் கழித்து வந்து தேனி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.